ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு
உலகத்தின் வாயைப் பூட்டி வைத்தவர் யாரு 2
ஆடுதய்யா கொடுமைக் கூத்தாடுதையா
அறம்வெல்லும் என்பதெல்லாம் பொய்யா பொய்யா

ஒ ஒ ஒ ஒ ஒ

ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு

குண்டுகளை எங்கள் மண்ணில் வீசி அடிக்கிறான்
கொலை வெறியன் நாளும் எங்கள் உயிர் குடிக்கிறான் 2
பெண்டுகளைப் பிள்ளைகளை வாட்டி வதைக்கிறான் 2
பிணம் பிணமாய் சுடுகாட்டில் கொண்டு புதைக்கிறான்

ஒ ஒ ஒ ஒ ஒ

ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு

பள்ளிக்கூடம் போனபிள்ளை திரும்ப வழியில்ல
பகலில் கூட எங்கள் மண்ணில் இன்று ஒளியில்ல 2
வெள்ளைக்காறன் நாளில் கூட இந்த நிலையில்ல 2
விழக்கம் கேட்டு போன தமிழன் உடம்பில் தலையில்ல 2

ஒ ஒ ஒ ஒ ஒ

ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு

மீன்பிடிக்கப் போன தோணி கடலில் எரியும்
மீனவனின் மனைவி கண்ணில் இரத்தம் சொரியுது 2
ஊனுறக்கம் இன்றி எங்கள் பொழுது போகும் 2
உறவு சொந்தம் பறிகொடுத்து மனசு வேகுது

ஒ ஒ ஒ ஒ

ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு

கொடியவங்க தீங்கிழைச்சா கோயில் நாடுவோம்
கோயில் மேலே குண்டு விழுந்தா எங்கே ஓடுவோம் 2
அடிமேல் அடி தாங்கித் தாங்கித் துடிக்கிறோம் ஜயா 2
ஆதரிப்பார் இல்லை கண்ணிர் வடிக்கிறோம் ஜயா

ஒ ஒ ஒ ஒ

ஓடுதய்யா தமிழீழத்தில் கண்ணீர் ஆறு